விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 300 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 28 திங்கட்கிழமை (14.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## பிரிக்ஸ் அமைப்பில் இணைகிறது இலங்கை

3 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை

3 ஆம் பக்கம் பார்க்க



## ஈரான் மீது இஸ்ரேல் சைபர் தாக்குதல்

8 ஆம் பக்கம் பார்க்க



## கட்சியிலிருந்து என்னை விலக்க சிலர் கடும் பிரயத்தனம்
### முன்னாள் எம்.பி சிறீதரன் காட்டம்

(யாழ்ப்பாணம்)

சிலர் என்னைத் தமிழரசுக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்கின்றபோதிலும் அதற்குப் பணிந்து கட்சியை விட்டு வெளியே செல்லும் எண்ணம் எனக்

15

### பளை அரசகேணியில்
## வெடிபொருள் வெடித்ததில் இளைஞன் படுகாயம்

(பளை)

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அரசகேணிப் பகுதியில் நேற்று வெடிபொருள் தவறுதலாக வெடித்ததில் இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியில்

15

## யாழில் டெங்கு கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாக யாழ்.மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடங்களை விட இவ்வருடம் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அவர் தெரி

15

# வடக்கின் அரசியல் கட்சிகள் எம்முடன் இணையத் தயார்
### ஜனாதிபதி அநுர அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களின் ஒன்றுகூடல் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

15

## நாட்டில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணம் உள்ளடங்கலாக மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் இன்று 75 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

15

## அரசியலிலிருந்து விலகினார் கெஹலிய ரம்புக்வெல



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல அரசியலில் இருந்து தற்காலிகமாக ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

15

## நீர்க்கட்டணம் செலுத்தாத முன்னாள் அமைச்சர்கள்
### மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்கள் 41 பேர் இதுவரை நீர்க்கட்டணத்தைச் செலுத்தவில்லையென நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

15




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றபோது...



ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
08 - 04 - 1941



இறப்பு
13 - 10 - 2024

## திருமதி சறோஜினிதேவி கனகரட்ணம்

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி கனகரட்ணம் அவர்கள் 13.10.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - பூமணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் வசந்தி(ஓய்வுநிலை ஆசிரியை), விஜயசிறி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகசுந்தரமூர்த்தி(ஓய்வுநிலை அதிபர்), உருத்திரராசன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சபாரட்ணம்(புத்தளம்), குணரட்ணம் (பிரான்ஸ்), சத்தியவிமலாதேவி(கனடா), அமரர் கமலாதேவி மற்றும் மாதுருதேவி(பிரான்ஸ்), அருந்தலாதேவி(சுவிஸ்), தனலக்ஸ்மிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வாமதேவன்(பிரான்ஸ்), மகேந்திரமூர்த்தி(சுவிஸ்), ராஜ்குமார்(பிரான்ஸ்), வசந்தன்(சுவிஸ்), ஜெகதீஸ்வரன்(கனடா), சூரியா, சந்திராதேவி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் துதிகரா(H.N.B), துவனிகரா(சித்தவைத்தியர்), சௌமியா(சுவிஸ்), வித்தியா(சுவிஸ்), நிஷாந்(A.G.M எலைன்ஸ் பினான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஸ்டிதரனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.10.2024 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் வடக்கு கலைவாணி வாழ் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

077 036 5792
077 607 0742
077 109 0148

தகவல்:
குடும்பத்தினர்

(2297)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வரட்ணம் கமலேஸ்வரி

(ஓய்வு நிலை குடும்பநல உத்தியோகத்தர்)

**விண்ணில் : 26.09.2023**

ஆறு இரண்டு திங்களாய்
ஆறாத எம் துயரம் மாறாத நினைவுடனே
வாழ்கின்றோம் உம் நினைவு அலைகளினால்
நீடூழி வாழ்வீர் என நினைவுகளில்
உற்றுநாமும் நியமதினில் வாழ்ந்திடவே
நீண்ட தூரம் சென்றதேனோ அம்மா!
வாழ்வின் உயர்வுக்காய், உதிரத்தை
ஈகையாக்கி எமை நிறைவுற வழிசமைத்தவரே
உதிரத்தை உணவாக்கி உயிர்காத்த எம் பொருளே...

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(426)

குடும்பத்தினர்
077 959 6562

# மரண அறிவித்தல்



மலர்வு
06.02.1943

உதிர்வு
13.10.2024

## அப்புத்துரை கண்ணகையம்மா

யாழ்ப்பாணம் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை கண்ணகையம்மா அவர்கள் 13.10.2024 அன்று காலமானார்.

அமரர்களான பொன்னுச்சாமி - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் அமரர்களான இராமலிங்கம் - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் அப்புத்துரையின்(இளைப்பாறிய பிரதம லிகிதர் சுகாதாரத் திணைக்களம்) அன்பு மனைவியும் அமரர்களான தர்மலிங்கம், பத்மாவதி, பரமேஸ்வரி, நாகலிங்கம் மற்றும் யோகம்மா, சரஸ்வதி, நவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர்களான ஆதிலட்சுமி, பொன்னம்பலம், முருகையா, திருமகள், மகாதேவன், தெட்சணாமூர்த்தி, எதிர்நாயகம், குமாரசாமி, சிவபாக்கியம் மற்றும் பாலபாஸ்கரன், உமாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரதி, அமரர் தயாபரி மற்றும் வனிதா(கனடா), நிமலநாதன்(லண்டன்), நளினி, சத்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி. மேற்குப் பிரதேச சபை உப அலுவலகம் - சுழிபுரம்), இராமலிங்கம்(மருத்துவ பௌதிகவியலாளர் போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம், புற்றுநோய்ப் பிரிவு - தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயரத்தினம், ஸ்ரீகணேசமூர்த்தி(டென்மார்க்), கேதீஸ்வரன்(கனடா), மைதிலி(லண்டன்), சிவரூபன் (கணித ஆசிரியர்), பகீரதன்(ஆசிரியர், யாழ். புனித ஹென்றி அரசர் கல்லூரி), கலையரசி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கௌசல்யா (கண் தொழில்நுட்பவியலாளர் போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) நிறோஜன்(விவசாய போதனாசிரியர்), துவாரகன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மெல்ஸ்ரா கம்பனி), பவதாரணி, நரேன்(டென்மார்க்), திகான்(டென்மார்க்), லோகினி(கனடா), கோபிகா(கனடா), மதுரா (லண்டன்), நிதுமிதன்(லண்டன்), சிவானுஜன் (முகாமைத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்), சரண்ராஜ், கஜானன், சுபஸ்திகன், சுபாங்கன், பிரசாந்தினி, நானிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.10.2024) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

077 979 0867(மகன்)

(429)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிக்ஸ் அமைப்பில் இணைகிறது இலங்கை

**(கொழும்பு)**

**ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹருணி விஜேவர்தன தலைமையிலான குழு எதிர்வரும் 20ஆம் திகதி கசான் நகருக்கு விஜயம் மேற்கொள்கின்றது. இந்த விஜயத்தின் மூலம் பிரிக்ஸ் பொருளாதார கூட்டமைப்பில் இலங்கையின் உறுப்புரிமை தொடரப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

எவ்வாறாயினும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் அண்மைய கொழும்பு விஜயத்தின்போது, இலங்கையின் பிரிக்ஸ் உறுப்புரிமை அபிலாஷைகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்ட சந்திப்புகளின்போது கலந்துரையாடி இருந்தார்.

இதற்கமைவாகவே இலங்கை பிரதிநிதிகள் குழு ரஷ்யா செல்கிறது. பிரிக்ஸ் அமைப்பு ஆரம்பத்தில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்காவை உள்ளடக்கியதாக இருந்தது. பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் வளர்ந்து வரும் சந்தை நாடுகளின் ஒரு முக்கிய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகவே பிரிக்ஸ் காணப்படுகிறது.

இந்த அமைப்பினை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் புதிய உறுப்பினர்களாக இலங்கை, ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளை இவ்வாண்டில் இணைத்துக் கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# சீரற்ற காலநிலை

- 18,795 குடும்பங்கள் பாதிப்பு
- இருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

சீரற்ற வானிலை காரணமாக 11 மாவட்டங்களில் 18,795 குடும்பங்களைச் சேர்ந்த 76,218 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், கடும் காற்று மற்றும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் 16,707 குடும்பங்களைச் சேர்ந்த 68,672 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த நிலைமை காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

233 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை பல பிரதேசங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## நிறுத்தி வைக்கப்பட்டுள்ள

# மதுபான கடைகளின் உரிமங்கள் மீள்பரிசீலனை

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட ஐம்பது மதுபான கடைகளின் உரிமங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் அவை மீண்டும் வழங்கப்படுவதற்கு அல்லது இரத்து செய்யப்படுவதற்கு முன்னர் மறுபரிசீலனை செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தலை முன்னிட்டு அரசியல் தொடர்புகள் மூலம் பல்வேறு மட்டத்தினருக்கு இந்த 50 உரிமங்கள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் குறித்த உரிமங்களைப் பெற்ற பலர் அவற்றை இரத்து செய்ய வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை உரிமம் பெற விரும்புவோருக்கு புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்படவுள்ளன.

மதுபானக்கடைகளை திறப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் பட்சத்தில் இந்த வழிகாட்டுதல்களின்படி விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது.

புதிய உரிமங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் குடியிருப்பாளர்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பாடசாலைகளின் அமைவிடங்கள் கருத்தில் கொள்ளப்படும் என்றும் அரச தரப்பு தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை மாத இறுதியில் விசேட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் புதிய முயற்சியொன்றை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய இரு நாடுகளினதும் கடற்றொழில் அமைச்சுக்களுக்கிடையில் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் விசேட பேச்சு வார்த்தையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரின் இலங்கை விஜயத்தின்போது இந்த பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

மீனவர் விவகாரம் இரு தரப்புக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளதாகவும் இம்மாதம் 29 ஆம் திகதி இலங்கை, இந்திய கடற்றொழில் அமைச்சுக்களுக்கு இடையில் 6 ஆவது தடவையாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அதன் ஊடாக இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் பொதுத் தீர்வொன்றை எட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (நி)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

ஆயிரத்திற்கு மேற்பட்ட திருமணங்களைப் பொருத்திய சாதனை...

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :- கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

021 720 1005

Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட கபடிப் போட்டி கோணாவில் ம.வி சம்பியன்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டியில் வடமாகாண அணிகள் சாதனை படைத்துள்ளனர்.

இதில் கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தையும், பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி வெள்ளிப்பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடிப்போட்டி கேகாலையில் நடைபெற்றது.

இதில் 17 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தையும் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றி வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பெண்கள் பிரிவில் கோணாவில் மகா வித்தியாலயம் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த போதிலும் ஆண்கள் பிரிவில் தேசிய மட்டத்தில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (6-90)

## நியூசிலாந்து டெஸ்ட் தொடர் இந்திய அணி அறிவிப்பு




நியூசிலாந்து அணி இந்தியா வில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் விளையாடவுள்ளது.இந்நிலையில் நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியை பிசிசிஐ அறிவித்துள்ளது.

ரோகித் சர்மா கப்டனாகவும், பும்ரா துணை கப்டனாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.இந்திய அணியின் விவரம் வருமாறு, ரோகித் சர்மா (கப்டன்), ஜஸ்பிரீத் பும்ரா (துணை கப்டன்), ஜெய்ஸ்வால், சுப்மன் கில், விராட் கோலி, கே எல் ராகுல், சர்பராஸ் கான், ரிஷப் பண்ட், துருவ் ஜுரெல், அஸ்வின் ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், சிராஜ், ஆகாஷ் தீப் மற்றும் ரிசர்வ் வீரர்கள்: ஹர்ஷித் ரானா, நிதிஷ் ரெட்டி, மயங்க் யாதவ், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

முதல் டெஸ்ட் போட்டி எதிர் வரும் 16ஆம் திகதி பெங்களூர் சின்ன சாமி மைதானத்தில் நடை பெறவுள்ளது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3240

மதுரன்




கருணிகா





கிஷாந்த்




சயாஸ்




விதுரா





டனீன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தல்; ரணில்-தினேஷ் இன்று கலந்துரையாடல்




(கொழும்பு)

பொதுத் தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியினரின் விஷேட கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் கொழும்பு - பிளவர் வீதியிலுள்ள அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் பங்கேற்குமாறு நாடளாவிய ரீதியிலுள்ள சகல தேர்தல் மாவட்டங்களினதும் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரசாரங்களை ஆரம்பித்தல், அதற்கான தொனிப்பொருள் மற்றும் எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது. (நி)

# சிறையில் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

போதைப்பொருள் வியாபாரிகளான கனேமுல்ல சஞ்சீவ மற்றும் வெலே சுதாக ஆகியோரின் அறைகளுக்குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்டிருந்த தொலைபேசி மற்றும் தொலைபேசிப் பாகங்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் பூஸா சிறைச்சாலை முகாமின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் விசேட அதிரடிப்படையினர் அடங்கிய அதிகாரிகள் குழுவொன்று விசேட பிரிவு A பிரிவில் உள்ள 44, 38, 37 ஆகிய அறைகளில் அவசர சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். (நி)

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 02 . 1967



இறப்பு 09 . 10 . 2024

## திருமதி. திருமகள் பரமநாதன்

யாழ்.சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடா (Toronto) வதிவிடமாகவும் கொண்ட திருமகள் பரமநாதன் அவர்கள் 09.10.2024 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரவு மங்களம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், பொன்னம்பலம் இராசம்மா தம்பதிகளின் மருமகளும், பரமநாதன் (பரம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாதன், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரவீன் அவர்களின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற இராஜசோதி, சுவாமிநாதர், சிவநாதன், தம்பு, காலஞ்சென்ற வடிவேலு, சாரதாதேவி, சக்தியா ஆகியோரின் மைத்துனியும், மூர்த்தி, ரிஸ்னா, தபோதினி, சுரேந்தர், நிரோஜா, நிலுஜினி, கோபிரமணன், மயூரினி, கார்த்திகா ஆகியோரின் அருமை மாமியும், பிரசாந்த், பிரதீபன், பிரயந்தி, பிரவீணா, கஜதேவி, மணிமாறன், சிவசுந்தர், பாலநாதன், குணேஷ், ஜனேஷ், தருணி ஆகியோரின் அன்புச் சித்தியும், விஷ்வா, மித்ரா, அருணா, மணாளன், சாய்க்கிருஸ்ணா, கேஷிகா, நிலா, ஆதிரா, நீயா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2024 இன்று திங்கட்கிழமை 4164 Sheppard Ave E, Scarborugh, ON M1S1T3, Canada வில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.தபோதினி (மருமகள்)
தொ.பே: 075 643 5108

(c-1390)

# நினைவஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. வ.ரவிச்சந்திரன்
அவர்களின் அன்புச் சகோதரன்
அமரர்.
## வயிரமுத்து இராசேந்திரன்

அவர்களின் நினைவு நாளில்
ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.

(2288)

# இராசிபலன்

14.10.2024
புரட்டாதி 28, திங்கட்கிழமை
துவாதசி பின்னிரவு 12.42 மணிவரை
சதயம் முன்னிரவு 10.31 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்பாராத முக்கிய நபர் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், காணாமல் போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் சிந்தை மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்** உடல் நலனில் கவனம் தேவை, புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை கூடும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிரிகள் உதிரியாகும் நாள், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், மருத்துவச் செலவுகள் குறையும் வாய்ப்புண்டு.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், பொருளாதார நிலை உயர வாய்ப்புண்டு.

**மீனம்** தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், தூரதேசச் செய்திகள் ஆச்சரியம் தரும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

முயற்சி இல்லாத வாழ்வு துடுப்பு இல்லாத படகு போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ரி.வரதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் ரி. ஈஸ்வரமோகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் ஏ.சஞ்சீவன், ஓய்வு நிலை வைத்தியர் செல்வி.கே. ஈஸ்வரி ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். அத்துடன் இந்நிகழ்விற்கான ஆசியுரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், அருட்திரு ரி.ஈ. அசோக் குமார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

'யூனியன்ஸ் சஞ்சிகை' ஆய்வுரையினை வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கவுள்ளார். (நி)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள்

## 1 லட்சம் ரூபாய் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 9 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு இலட்ச ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை பொது சுகாதார பரிசோதகர் ப. தினேஷ் தலைமையிலான அணியினர் வல்வெட்டித்துறை பகுதிகளில் இயங்கிய உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தனர். அதன்போது , சுகாதார சீர்கேட்டுடனும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் ஐந்து இனம் காணப்பட்டன.

அவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்குத் தொடரப்பட்ட போது உணவு கையாளும் நிலையங்களின் ஐந்து உரிமையாளர்களும் மன்றில் தோன்றி, தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர். அதனை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று, ஐவருக்கும் 70 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

அதேவேளை பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குள் உட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராகவும் அன்றைய தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

அதன் போது உணவு கையாளும் நிலையங்களின் 4 உரிமையாளர்கள் மன்றில் தோன்றி தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று அவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

அன்றைய தினம் மன்றிற்கு சமூகமளிக்காத உணவு கையாளும் நிலைய உரிமையாளருக்கு எதிர்வரும் 22ஆம் திகதி மன்றில் சமூகமளிக்குமாறு அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. (நி-33)

# பலமிக்க ஆணையை மக்கள் வழங்க வேண்டும்

### சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

ஒற்றுமையை விரும்பும் தமிழ் மக்களின் தெரிவு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகும். அதற்கு பலமான ஆணையை வழங்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்



நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் பின்னரான சூழலில் தமிழ் மக்கள் ஒற்றுமையை மையப்படுத்தியே தமது ஆணையை வழங்கி வந்துள்ளார்கள். அந்த வகையில் தொடர்ச்சியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாம் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

அதேவேளை எமது கூட்டினை பல வீனப்படுத்துவதற்கு அண்மைய நாட்களில் எதிர்மறையான பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், தமிழ் மக்கள் யதார்த்தத்தினை நன்கு அறிவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

அந்த வகையில், நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானது. திருப்புமுனையை ஏற்படுத்துவதாகவே இருக்கப் போகின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-299)

# மகா சமாதி குரு பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

சுத்த சிவ சமரச சன்மார்க்க சாது குருபீட ஸ்ரீ மலர் அம் மை யாரின் 14 ஆவது குருபூஜை நாளை உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் இடம்பெறவுள்ளது.

அதேவேளை ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 45ஆவது மகா சமாதிக் குருபூஜை மறுவன் புலோவிலுள்ள சமாதி நிலையத்தில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)



யா/மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலை மாணவி செல்வி தாஜகான் மகதி(தரம் நான்கு) அண்மையில் நடைபெற்று முடிந்த 2024 ஆம் ஆண்டிற்கான தமிழ்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் பாவோதுதல் போட்டியில் முதலிடம் பெற்று தாம் கல்வி கற்கும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

அத்துடன் தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவன் செல்வன் அரவிந்தன் மிதுசிகன் ஆக்கத்திறன் வெளிப்பாடு போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்குச் சென்று பங்குபற்றிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.


# கல்யாணமாலை


## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம் :5'11"<br>தகைமை/தொழில்: BA , MSC>,Post Office(Employ) London<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உயர்பதவி<br>தொ.இ: B/14801 | பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>1இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது சுய தொழில் செய்வோர்<br>தொ.இ: G/14811 |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 71<br>7இல் செவ்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: Bsc, Msc, Research Assistant(UK)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி (IT Field )<br>தொ.இ: B/14802 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>11இல் செவ்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: Bsc, Clinical Nurse<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ./இ G/14813 |
| பிறப்பு:1988-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம் :6'1"<br>தகைமை/தொழில்:IT Engineer (Canada)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/14803 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>4இல் சூரி செவ்<br>கி.பா: 9 1/4<br>உயரம் :5'<br>தகைமை/தொழில்:BA ,Teacher<br>எதிர்பார்ப்பு: தொழில் புரிவோர்<br>தொ.இ: G/14815 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழன் உலக சாதனை படைத்த திருமலைச் சிறுமி



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 3 வருடங்கள் 11 மாதங்களேயான பிரேம்ராஜ் தாரா எனும் சிறுமி அதிக ஞாபகத்திறன் மூலம் சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் சோழன் உலகசாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில், 2 முதல் 7 வரையான பெருக்கல் வாய்ப்பாடுகள், தனிம வரிசை அட்டவணையின் 50 கூறுகள், மனித உடல் உறுப்புகள் 6 இன் உட்பாகங்கள் போன்றவற்றை கூறிய அதேவேளை, 100 சமூக ஊடகங்களின் சின்னங்களையும் பிழையின்றி அடையாளம் காட்டினார்.

இவரது முயற்சியை முறைப்படி கண்காணித்து பரிசோதித்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் திருகோணம்லை மாவட்டத் தலைவர் எம்.தனராஜ், மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் த. இன்பராசா, திருகோணமலை மாவட்டப் பொதுச் செயலாளர் சுயன்தன் விக்னேஷ்வர ராஜா மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பொதுச் செயலாளர் சிவ வரதகரன் போன்றோர் சிறுமியின் முயற்சியை உலக சாதனையாக பதிவு செய்தனர்.

சோழன் உலக சாதனை படைத்த சிறுமி பிரேம் ராஜ் தாராவிற்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், நினைவுக் கேடயம், தங்கப் பதக்கம், அடையாள அட்டை மற்றும் பைல் போன்றவை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள், மற்றும் சிறப்பு விருந்தினர்களினால் வழங்கிப் பாராட்டப்பட்டது. (நி)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

(411)



யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்-2024

திகதி : 15.10.2024
நேரம் : மு.ப 9.00
இடம் : சான்டேர்ஸ் மண்டபம்

தலைவர்
திரு.T.வரதன் (யூனியன்ஸ்)
(அதிபர்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் T.ஈஸ்வரமோகன் (யூனியன்ஸ்)
(விலங்கியல் துறை, விஞ்ஞானபீடம், யாழ்பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு.A.சஞ்சீவன்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர்-கல்வி அபிவிருத்தி, வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்)

கௌரவ விருந்தினர்
வைத்திய கலாநிதி செல்வி.K.ஈஸ்வரி (யூனியன்ஸ்)
(ஓய்வுநிலை வைத்தியர்)

ஆசியுரை
கலாநிதி.ஆறு திருமுருகன்
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

அருட்பணி T.E. அசோக்குமார்
(C.A.C.M, தெல்லிப்பழை)

நூல் ஆய்வுரை
திரு.ந.விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை)

இவ் அழைப்பினை ஏற்று அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைத்து நிற்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்

(சி-1381)


# சாவகச்சேரி பிரதேச சபை

01.01.2025 முதல் 31.12.2025 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 14.10.2024 தொடக்கம் 28.10.2024 வரை
அலுவலக நாட்களில் :- மு.ப 09.00 - பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 29.10.2024 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 29.10.2024 மு.ப 10.30 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | உத்தேச மாத வாடகை | 2025 இற்கான கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | | |
| 1 | கொடிகாமம் மத்திய மரக்கறிச்சந்தை, | | 16,000,000.00 | 160,000.00 | 1,000.00 |
| 2 | கொடிகாமம் சந்தை வண்டி வாகன தரிப்பு நிலையம். | | 210,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 3 | கொடிகாமம் மீன் சந்தை | | 2,100,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 4 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,050,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 5 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 395,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 6 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 01 | 1,000.00 | 140,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 7 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 02 | 1,000.00 | 130,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 8 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கட்டண மலசலகூடம். | | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 9 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் இல-01 | | 25,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் இல- 02 | | 35,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் இல- 03 | | 35,000.00 | 5,000.00 | 1,000.00 |
| வரணி உப அலுவலகம் | | | | | |
| 12 | வரணி பொதுச்சந்தை | | 50,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 13 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | | 29,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 14 | வரணி ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 180,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 15 | வரணி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 110,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 16 | வரணி இயற்றாலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 38,200.00 | 5,000.00 | 1,000.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | | |
| 17 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 175,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 18 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 225,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 19 | கைதடி பொதுச்சந்தை | | 335,000.00 | 20,000.00 | 1,000.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | | |
| 20 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 690,000.00 | 100,000.00 | 1,000.00 |
| 21 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 80,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 22 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 42,600.00 | 5,000.00 | 1,000.00 |
| 23 | மிருசுவில் பொதுச்சந்தை | | 10,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 24 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | | 48,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 25 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | | 36,000.00 | 10,000.00 | 1,000.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | | |
| 26 | நாவற்குழி பொதுச்சந்தை | | 27,000.00 | 1,000.00 | 1,000.00 |

நிபந்தனைகள்:-

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், மற்றும் அதன் நிழற்படப்பிரதியினையும்,தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச்சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" (Balcklist) கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளும் போது மேலுள்ள அட்டவணைக்கு அமைவாக கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
4. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம். என்ற முகவரிக்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. 29.10.2024 ஆம் திகதியன்று மு.ப 10.00மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர் மாத்திரம் சமூகமளிக்கலாம்.
6. ஆகக்குறைந்த கேள்வித் தொகையைவிட குறைந்த கேள்வி இடுதல் அவதானிக்கப்படின் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
7. தெரிவுசெய்யப்படும் சித்திகரகேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை உரிய உப அலுவலகங்களில் 2024.11.06ஆம் திகதிக்கு முன் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் தலைமைஅலுவலகத்திற்கு வருகை தந்து சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளவேண்டும்.
8. அறைகள் மற்றும் கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் இயைபுடைய மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
9. வண்டி, வாகன தரிப்பு நிலையங்களுக்கான கட்டணமாக பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிக கட்டணம் அறவிடமுடியாது.
10. இறைச்சிக்காக மாடுகளை பொதுச்சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனைக் கொல்களத்தில் அழிக்க வேண்டும் என்பதுடன் சபைக்கு வெளியிலிருந்து இறைச்சி கொண்டு வருவதானால் சபையிடம் அனுமதி பெறப்படவேண்டும்.
11. சந்தைகளில் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படும் எந்தவொரு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கும் எவ்வித கழிவுகளும் வழங்கும் நடைமுறை அனுமதிக்கப்படமாட்டாது.
12. கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
13 மேலதிக விபரங்கள், விளக்கங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை.
தொ.பேசி இல : 021 205 0356
மின்னஞ்சல் : chavakachcherips1@yahoo.com

திகதி : 14.10.2024

(சி-1391)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்

## ஐ.நா அமைதிப்படை மீதான தாக்குதல் இஸ்ரேலுக்கு எதிராக திரும்பிய 40 நாடுகள்

(ஜெனீவா)

லெபனானில் ஐ.நா அமைதிப்படையினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என குறிப்பிட்டு இஸ்ரேலுக்கு எதிராக 40 நாடுகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

லெபனானுக்கு எதிரான தாக்குதலின்போது ஐ.நா அமைதிப்படையினரின் இரு வீரர்கள் படுகாயமடைந்ததை தொடர்ந்து குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் போர் நெருக்கடி அதிகரித்துவரும் நிலையில், அமைதிப்படையினரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக தாங்கள் கருதுவதாக அந்த 40 நாடுகளும் தங்களின் கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.



இதில் இலங்கையும் தமது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

மேலும் ஐ.நா அமைதிப் படையினர் மீதான தாக்குதல் என்பது ஒருபோதும் ஏற்க முடியாது என்பதுடன், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் உரிய முறைப்படி விசாரிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

முன்னதாக பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாடுகள் இணைந்து இந்த விவகாரம் தொடர்பில் வெள்ளிக்கிழமை கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் இதுபோன்ற தாக்குதல்கள் ஏற்புடையது அல்ல என்றும், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (நி)

## இஸ்ரேலுக்கு உதவினால் அவ்வளவு தான்...! அமெரிக்க சார்பு அரபு நாடுகளுக்கு ஈரான் எச்சரிக்கை!





(டெஹ்ரான்)

பாலஸ்தீனம் மீது தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் கடந்த மாதம் முதல் லெபனான் மீதும் தாக்குதல் நடத்தி போரை விரிவுபடுத்தியுள்ளது. இந்த தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் யாரும் எதிர்பாராதபோது இஸ்ரேல் மீது 400 ஏவுகணைகளை ஏவியது ஈரான்.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீது தாக்குதல் நடந்த அமெரிக்காவுடன் சேர்ந்து இஸ்ரேல் திட்டம் தீட்டி வருகிறது. ஈரானில் உள்ள அணுசக்தி மையங்களையும், எண்ணெய் கிணறுகளையும் இஸ்ரேல் தாக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில்தான், மத்திய கிழக்கில் இருக்கும் வளைகுடா அரபு நாடுகள், குறிப்பாக அமெரிக்காவுடன் நெருக்கம் காட்டும் நாடுகளுக்கு ஈரான் புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில், அரபு நாடுகள் தங்களின் வான்வழி மற்றும் இராணுவத் தளங்களை இஸ்ரேலிய தாக்குதலுக்கு பயன்படுத்த அனுமதித்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதற்கான தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்க படைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ள ஐக்கிய அரபு அமீரகம், ஜோர்டான், கட்டார் உள்ளிட்ட எண்ணெய் வளமிக்க நாடுகளுக்கு ஈரானின் எச்சரிக்கை இரகசிய சனல்கள் மூலம் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. (நி)

## இந்தோனேசியாவில் படகு விபத்து

❖ 5 பேர் உடல் கருகிப் பலி

❖ 9 பேர் படுகாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் வடக்கு மலுகு தீவில் பெனி லவோஸ் மாகாணத்தில் ஆளுநர் தேர்தல் நடைபெற உள்ளது.

ஆளுநர் வேட்பாளரான பென்னி தனது ஆதரவாளர்களுடன் அங்குள்ள பகுதிகளுக்கு படகில் சென்று பிரசாரம் மேற்கொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் படகில் தீப்பிடித்தது. காற்றின் வேகம் காரணமாக படகு முழுவதும் தீ பரவி எரிய விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் படகில் இருந்த 5 பேர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 9 பேர் படுகாயம் அடைந்தனர். (நி)

## சைபர் த... நிலை...

(டெஹ்ரான்) —

ஈரான், இஸ்ரேல்... அதிகரித்துள்ள நி... இஸ்ரேல் முன்னெடு... உட்பட பல்வேறு இட... ஈரான் அரசின் ... ஏற்பட்டுள்ளது.

ஈரானின் பாராளுமன்றம், சட்டப் பேரவை, நீதித்துறை நிர்வாகங்களையும், அணுசக்தி, எரிசக்தி மற்றும் மின் விநியோக கட்டமைப்புகளையும் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய சைபர் தாக்குதலால் கடுமையான பாதிப்புகள்

ஏற்பட்... உள்ள... மைய... கவும்... என.

மு... 17 ஆ...

## மோசமான இ... தென்கொரியாவை...

(பியாங்யாங்)

ட்ரோன்களை தொடர்ந்து எங்கள் நாட்டிற்குள் அனுப்பி வந்தால் தென் கொரியா மோசமான பேரழிவைச் சந்திக்க நேரிடும் என வட கொரியா எச்சரித்து உள்ளது.

வட கொரியா - தென் கொரியா இடையே நீண்டகாலமாக பகை இருந்து வருகிறது. தங்கள் நாட்டிற்குள் ட்ரோன்கள் மற்றும் பலூன்களை தென்கொரியா அனுப்பி வருவதாக வட கொரியா குற்றம் சாட்டி வருகிறது.

பலூன்களில் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கு எதிரான பிரசாரங்கள், தென் கொரியா நாடகங்கள் மற்றும் பாப் பாடல்கள் அடங்கிய சாதனங்கள் இருப்பதாகவும் குற்றம்சாட்டி உள்ளது.

தென் கொரிய கலாசாரம், பரவுவதை தடுக்க பலூன்களை அழிக்கும் பணியிலும் அந்நாடு ஈடுபட்டு உள்ளது. இதன் காரணமாக முன் எப்போதும் இல்லாத வகையில் இரு நாடுகளுக்கு இடையில் உறவு பாதிக்கப்பட்டு உள்ளது.

வட கொரியா மீது தாக்குதல் நடத்தினால், அணு ஆயுதங்களை பயன்படுத்தத் தயங்க மாட்டேன் என அந்நாட்டை ஆட்சி செய்யும் கிம்



ஜான்...

இ... கொரி... ட்ரோ... யது. ... விமா... தயார... இது... அழிக்...

இ... மீண்... எதிரா... சாதன... அனு... உன்... ஜோ... இதன... அமை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் நடத்தியது இஸ்ரேல்

# லகுலைந்தது ஈரான்!

**ஸ்ரேல் இடையே போர் ஏற்படும் பதற்றம் ள நிலையில் ஈரான் மீது சைபர் தாக்குதலை ன்னெடுத்துள்ளது. ஈரான் அணுசக்தி நிலையம் று இடங்களில் நடந்த இந்த சைபர் தாக்குதலால் சின் செயற்பாடுகள் முடங்கும் அபாயம் .**



ஏற்பட்டுள்ளன. ஈரான் முழுவதும் உள்ள வங்கிகள் மற்றும் ஏ.ரி.எம் மையங்கள் முடங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக கடந்த செப்ரெம்பர் 17 ஆம் திகதி லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா அமைப்பினர் வைத்திருந்த பேஜர்கள், வாக்கி டாக்கிகள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு சாதனங்கள் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறின.

இந்த சைபர் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் உள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் தற்போது ஈரான் அரசு நிர்வாகங்கள் மீது நடந்துள்ள இந்த சைபர் தாக்குதல் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இதற்கிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமானங்களில் பேஜர்கள், வாக்கி டாக்கிகள் உள்ளிட்டவற்றை எடுத்துச்செல்ல ஈரான் அரசு தடை விதித்துள்ளது. (நி)

## ன அழிவை சந்திக்கும் பாவை மிரட்டும் வடகொரியா



ஜான் உங் எச்சரித்து இருந்தார்.

இதன் பிறகு 2022 இல் வட கொரியா, தென் கொரியாவிற்குள் ட்ரோன்களை அனுப்பத் தொடங்கியது. இதனை அழிப்பதற்காக போர் விமானங்களை தென் கொரியா தயாராக வைத்து இருந்தாலும், இதுவரை எந்த ட்ரோனையும் அழிக்கவில்லை.

இந்நிலையில், தென் கொரியா மீண்டும், வட கொரியாவுக்கு எதிரான பிரசாரங்கள் அடங்கிய சாதனங்களுடன் ட்ரோன்களை அனுப்பி வருவதாக கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜோங் குற்றம்சாட்டி உள்ளார். இதனை தென் கொரியா பாதுகாப்பு அமைச்சரும், இராணுவத் தளபதியும் மறுத்துள்ளனர்.

இதனையடுத்து கிம் யோ ஜோங் கூறியதாவது, வட கொரியாவுக்கு எதிரான தகவல்களைக் கொண்ட ட்ரோன்கள் தொடர்பான குற்றச்சாட்டை உறுதி செய்ய தென் கொரியா மறுக்கிறது. இதனைப் பார்த்தால், இராணுவ கேங்ஸ்டர்கள் தான் இதனை செய்கின்றனர் என தெரிகிறது. இத்தகைய ட்ரோன்கள் மீண்டும் பியாங்யாங் வானில் தென்படுவதை பார்த்தால், அது மோசமான பேரழிவுக்கு தான் வழிவகுக்கும் என அவர் தெரிவித்தார். (நி)

## வெள்ளத்தில் மூழ்கிய சஹாரா பாலைவனம்

(ரபாத்)

தென்கிழக்கு மொரோக்கோவில் பெய்த கனமழையின் தாக்கம் சஹாரா பாலைவனத்தை வெள்ளத்தில் மூழ்கச்செய்துள்ளது.

குறித்த கனமழையானது சராசரியை விட அதிகம் என மொரோக்கோ வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மொரோக்கோ தலைநகர் ரபாத்தில் இருந்து 450 கி.மீ தெற்கே அமைந்துள்ள டகோனைட் கிராமத்தில் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமான பருவநிலை மாற்றமானது தொடருகின்ற நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம்100 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.


இதனிடையே, ஜகோராவிற்கும் டாடாவிற்கும் இடையே பல ஆண்டுகளாக நிரம்பாமல் இருந்த ஆறுகள் நிரம்பியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சஹாரா பாலைவனம் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்ற புகைப்படங்களை மொரோக்கோ வானிலை மையம் வெளியிட்டுள்ளது.

இவ்வளவு குறுகிய கால இடைவெளியில் அதிகளவான மழை பெய்து 30 முதல் 50 ஆண்டுகள் ஆகிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் சஹாரா பாலைவனம், வடக்கு, மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்கா முழுவதும் 9 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் வெள்ளம் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புவி வெப்பமடைதல் மற்றும் தீவிர வானிலை காரணமாக வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இந்த அளவிலான புயல்கள் இப்பகுதியில் அடிக்கடி ஏற்படக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சி சார்பில் தேர்தலில் களமிறங்கும் தேரர்கள்

(கொழும்பு)

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையிலான தமிழ் கட்சியான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) இரண்டு பௌத்த பிக்குகளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறக்கியுள்ளது டன் பௌத்த பிக்குவை களமிறக்கிய முதல் தமிழ் கட்சி என்ற வரலாற்றையும் படைத்துள்ளது.

பௌத்த பிக்குகளான கிரிபனாரே விஜித தேரர் மற்றும் உடவளவே ஜினசிறி தேரர் ஆகியோர் கொழும்பு மாவட்டத்தில் ஈ.பி.டி.பி.சார்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த போட்டியிடவுள்ளனர்.

“தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி கட்சியில் பொதுத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே எங்களின் ஒரே முயற்சியே தவிர, நாங்கள் பதவிகளுக்குப் பின் செல்லவில்லை. நாங்கள் ஒரே இலங்கை தேசத்தை கட்டியெழுப்ப விரும்புகிறோம் என வேட்புமனு கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு விஜிததேரர் தெரிவித்தார். (நி)

# வெண்மையாக்கும் கிறீம்களால் உடல் நலப்பிரச்சினைகள்

## நுகர்வோர் விவகார சபை எச்சரிக்கை

(கொழும்பு)



இணையவழி ஊடாக விற்பனை செய்யப்படும் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்கள் மற்றும் லோஷன்களைப் பயன்படுத்தும் போது அதிக அவதானத்துடன் செயற்படுமாறு பொது மக்களுக்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன் இணையத்தில் பெண்கள் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களை பயன்படுத்துவதால் பல உடல் நலப்பிரச்சினைகள் எழுந்துள்ளதாக நுகர்வோர் மற்றும் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

மேலும் அழகுசாதனப் பொருட்கள், வர்த்தகத்தில் விதிக்கப்பட்டுள்ள விதி முறைகள் தொடர்பில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 150 | 80-100 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 250 | 400 |
| தக்காளி | 300 | 350 | 200 | 260 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 150-200 | 200 |
| கோவா | 200 | 300 | 300 | 280 | 250 |
| கரட் | 180 | 200 | 200 | 250 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 60 | 120 | 100 | 250 | 250 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 100-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300-350 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 240 | 280 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 500-600 | 400 |
| வெண்டக்காய் | 80 | 200 | 120 | 100-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 200 | 140 | 250 |
| பயற்றங்காய் | 400 | 400 | 280 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 180 | 300 | 250 | 350 | 300 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 120-150 | 200 |
| கறிமிளகாய் | 550 | 500 | 600 | 420 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 300 | 100-150 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 160 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 60 | 80 | 80. |
| தேசிக்காய் | 500 | 300 | 500 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 140 | 150 | 80-150 | 100-150 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 140 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

# இன்று ஒரு தகவல் 240



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மதுவின் கொடுமை

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். நல்ல ராஜா தான். இருந்தாலும் அவரிடம் ஒரு கெட்ட பழக்கம். வேறு ஒன்றுமில்லை. கொஞ்சம் மது அருந்துவார் அவ்வளவு தான்.

இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகமாக குடிக்க ஆரம்பித்து விட்டார். இது எல்லோருக்கும் அதிக கஷ்டமாகப் போய்விட்டது. இருக்காதா? ராஜாவே குடிக்க ஆரம்பித்து விட்டால் ராஜ்யம் என்னத்திற்கு ஆகிறது.

ராணிக்கும் இது மனதிற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. என்ன செய்வது என்று யோசித்தார். அந்த சமயத்திலே புத்திசாலியான அமைச்சர் ஒருவர் அங்கே இருந்தார். அவரிடம் போனார். விடயத்தைச் சொன்னார்.

மன்னரை எப்படியாவது இந்த மதுப்பழக்கத்திலேயிருந்து காப்பாற்றி ஆக வேண்டும்! அதற்கு நீங்கள் தான் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சரி... பார்க்கின்றேன் என்று சொல்லிவிட்டார் அமைச்சர். அதன் பின்பு ஒருநாள் அந்த ராஜா இருந்த தனி அறைக்குள்ளே அமைச்சர் போனார்.

அங்கே இருந்த ஒரு மதுப்போத்தலை எடுத்துத் தெரியாமல் தன் மடியில் மறைத்து வைத்துக் கொண்டார். ராஜா தற்செயலாக இதைக் கவனித்துவிட்டார். உடனே அமைச்சரை அருகிலே கூப்பிட்டார். மடியிலே என்ன அது? என்று கேட்டார். ஒன்றும் இல்லை என்றார் அமைச்சர்.

உண்மையைச் சொல்! மடியிலே என்ன? என்று மறுபடியும் கேட்டார் ராஜா. இது... இது... வந்து கிளி! என்றார் அமைச்சர். என்ன உளறுகிறாய்? கிளியா அது! என்றார் ராஜா. இல்லை... இல்லை.. இது குதிரை என்றார் அமைச்சர். ராஜாவுக்கு கோபம் அதிகமாகிவிட்டது.

இதோபார்! செய்த குற்றத்தை ஒத்துக்கொள்! அது தான் உனக்கு நல்லது! அதை விட்டுவிட்டு குதிரை, கழுதை என்று கதை சொல்லிக் கொண்டிருக்காதே என்றார்.

மன்னா நீங்கள் சொல்லுவது தான் கரெக்ட்! என் மடியிலே இருக்கிறது கழுதை தான் என்றார் அவர். மன்னர் கோபத்தின் எல்லைக்கே போய்விட்டார்.

இதோபார் கடைசி வாய்ப்புத் தருகின்றேன் உனக்கு. மடியிலே என்ன? உள்ளதை சொல்லிவிட்டால் உயிரோடு விடுவேன் இல்லை என்றால் உன் தலையை வெட்டும்படியாக உத்தரவு போடுவேன் என்றார்.

இந்தத் தடவை அமைச்சர் உள்ளதைச் சொல்லி விட்டார். மடியிலே இருப்பது மதுப் போத்தல் என்றார்.

ஆரம்பத்திலேயே இதை என்னிடம் சொல்லி இருக்கலாமே என்றார் மன்னர். இப்பவும் சொல்கிறேன் நான் சொன்னது எதுவும் பொய் இல்லை என்றார் அவர்.

ராஜா முறைத்தார். அமைச்சர் மெதுவாக அவரைப் பார்த்துச் சொன்னார். மன்னா! முதலிலே ஒரு கோப்பை மது உள்ளே போனால் ஒன்றும் செய்ய முடியாது! அதைத்தான் ஒன்றுமில்லை! என்றேன்.

இரண்டாவது கோப்பை உள்ளே போனதும் மனிதன் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திருப்பிச் சொல்லிக் கொண்டு இருப்பான் அதனாலே கிளி என்று சொன்னேன்.

மூன்றாவது கோப்பை உள்ளே போனால் குதிரை மாதிரி உறும ஆரம்பித்து விடுவான். நான்காவது கோப்பை உள்ளே போனால் கழுதை மாதிரி கத்துவான். ஐந்தாவது கோப்பை உள்ளே போனால் மனிதன் மதுவாகவே ஆகிவிடுவான்.

அதனாலே தான் ஐந்தாவது தடவை கேட்டதும் மது என்பதை ஒத்துக் கொண்டேன். என்றார் அமைச்சர்.

சாராயம் எவ்வளவு கெடுதல் செய்யும் என்பதை ராஜாவுக்கு மிகவும் சாமர்த்தியமாக புரிய வைத்துவிட்டார் அமைச்சர். அதன் பின்பு ராஜா அந்தப் பழக்கத்தையே விட்டு விட்டாராம்.

இந்தக் காலத்து குடிகாரர் ஒருவர்! ஒரு சாராயக் கடையை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தார். அந்த சமயத்திலே ஒரு பிச்சைக்காரன் அவரிடம் சென்று கையேந்தினான். ஐயா பசிக்கின்றது என்றான். அப்படியா வா எங்க வீட்டுக்கு சாப்பாடு போடுகின்றேன். அதற்கு முன்பு நீயும் கொஞ்சம் சாராயம் குடித்துக்கொள். நான் காசு தருகின்றேன் என்றார் அந்த குடிமகன்.

ஐயய்யோ சாராயம் குடிக்கிறது மிகவும் கெட்டபழக்கம் என்று கூறி வேண்டாம் என்றான் அவன். சரி வா என்று வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். மனைவியைக் கூப்பிட்டு சாப்பாடு போடச்சொன்னார்.

அந்த அம்மா கொண்டு வந்து போட்டார். பிச்சைக்காரன். சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். அப்போது அந்தக் குடிமகன் தன் மனைவியைப் பார்த்து இதோ பார்! இந்த ஆள் குடிக்கிறது தப்பு என்று சொல்லுகிறான். ஆனால் அவன் பிச்சை எடுத்து இருக்கிறான். நான் குடிக்கிறேன். ஆனால் நல்லபடியாக இருக்கின்றேன். என்னைப் போய் இதற்காகத் திட்டிக்கொண்டு இருக்கிறாயே! என்றார் மிகவும் கம்பீரமாக.

அந்த அம்மா ஒன்றும் சொல்லவில்லை. அதற்குள்ளே அந்த பிச்சைக்காரன் சாப்பிட்டு முடித்துவிட்டு கைகழுவிவிட்டு வந்தான். அந்த குடிமகனைப் பார்த்தான்.

ஐயா நான் ஒன்று சொன்னால் நீங்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. நான் ஏற்கனவே உங்களை மாதிரி குடித்துக் கொண்டு இருந்தேன். அதனாலே தான் இப்படி பிச்சைக்காரனாக ஆனேன்! என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு தெருவிலே இறங்கி நடக்க ஆரம்பித்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலும்பியல் சிகிச்சை விடுதிகள் மன்னாரில் திறந்து வைப்பு



(மன்னார் )

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிய எலும்பியல் சத்திரசிகிச்சை விடுதிகள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் மிக நீண்ட கால தேவையாக விருந்த எலும்பு முறிவு மற்றும் சிகிச்சைக்கான விசேட விடுதிகளை மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் ஹனிபா திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் எலும்பியல் சத்திரசிகிச்சை விசேட நிபுணர்கள் மருத்துவர் பி. திலீபன், மருத்துவர் ஆர்.எம்.எம். தீபன்,ஏனைய விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் மற்றும் ஏனைய திடீர் விபத்துக்களால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உயர்தரமான, பாதுகாப்பான சத்திரசிகிச்சை சேவைகளை வழங்கும் நோக்கில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிய எலும்பியல் துறை சத்திர சிகிச்சை ஆண், பெண் விடுதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-285)

# தமிழ் மக்களின் வழிகாட்டி தமிழ் அரசுக் கட்சியே

## சுமந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ள நிலையில் அவர்களுக்கான மாற்றத்தின் திசைகாட்டியாக இருப்பது தமிழ் அரசுக் கட்சியாகும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மக்களின் பாரம்பரிய பேராதரவு பெற்ற ஒன்றாகும். அந்த வகையில் அக்கட்சியின் ஆதரவாளர்கள் இம்முறை மாற்றத்தினை எதிர்பார்க்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மக்களின் மாற்றத்தின் திசை காட்டியாக இருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சி தான். இதனை தமிழரசுக் கட்சி இம்முறை களமிறக்கியுள்ள வேட்பாளர்கள் மூலமாக உறுதி செய்ய முடியும்.

அந்த வகையில், தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை ஓரணிக்கே அளிக்க வேண்டும். அதன் மூலமாகவே அவர்களின் பேரம்பேசும் சக்தியை உறுதி செய்துகொள்ள முடியும்.

ஆகவே புதிய அரசியல் கலாசாரத்தினையும், தனித்துவத்தினையும் உறுதி செய்யும் வகையிலான செயற்பாடுகளை இந்தத் தேர்தல் களத்தில் காண முடியும் எனத் தெரிவித்தார். (6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical name- Cirtrus aurantium**
**Family- Rutaceae**

## நாரத்தம்பழம்

நாரத்தம்பழம் எமது கிராமங்களில் எமது மண் வளங்களில் செழிப்பாக வளர்ந்து நிறையப் பழங்களையும் அறுவடை செய்யக்கூடியதாக இருக் கும். ஆனாலும் எம் மக்கள் மருத்துவப் பண்புகள் நிறைந் ததும் அதிக ஊட்டச்சத்துக் களை உள்ளடக்கியதும், மலிவானதும், இலகுவில் கிடைக்கக் கூடிய எமது ஊர் நாரத்தம்பழங்களை பயன்படுத்துவது மிகமிகக் குறைவு. அதற்குப் பதிலாக அதிக விலை கொடுத்து வாங்கும் ஆரெஞ்சுப் பழங்களை வாங்கி பயன்படுத்துகிறார்கள். நாரத்தம் பழத்திற்கு புளிப்பும் இனிப்புச் சுவையும் உண்டு. இப் பழத்தில் அதிகளவு உயிர்ச்சத்து C காணப்படுகிறது.

இது எமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதி கரிக்கக் கூடியது. மேலும் எமது இரத் தத்திலுள்ள வெள்ளை அணுக்களின் உற்பத்தி யையும் அதி கரிக்கக் கூடியது. நாரத்தம் பழச்சாறு வாந்தியை நிறுத்தக் கூடியது. பசியைத் தூண்டக்கக் கூடியது. வயிற்றில் வாயு சம்பந்தமான கோளாறுகள், பசிமந்தம் ஏற்பட்டால் நாரத்தம் பழச்சாறைப் பிழிந்து 60 மில்லி அளவு எடுத்து 200 மில்லி வெந்நீரில் கலந்து எடுத்து வர மேற்படி கோளா றுகள் நீங்கும். நாரத்தம் பழச்சாறு இருதய நோய்கள், இருதயதுடிப்பு, பக்கவாதம் ஆகியவற்றின் அபாயத்தைத் தடுக்கக் கூடியது. கர்ப்ப காலத்தில் ஏற்படும் வாந்தியைத் தடுக்கவும் கர்ப்ப கால ஆரோக்கியத்திற்கும் நாரத்தம்பழச்சாறு, நீர், தேன் அளவாக கலந்து எடுத்து வர நல்ல பலனைக் கொடுக்கும்.

உடற்பருமன் குறைய நாரத்தம்பழத்தை வெதுவெதுப்பான நீரில் கலந்து சிறிதளவு தூய தேனும் கலந்து அதிகாலையில் குடித்துவர உடற்பருமன் சிறிது சிறிதாக குறைய ஆரம்பிக்கும்.



நாரத்தம்பழச்சாற்றில் அதிகளவு உயிர்ச்சத்து C இருப்பதால் சளித் தொல்லை, தும்மல் போன்ற நிலைமைகளுக்கும் சிறந்தது. அதே போல் நாரத்தம்பழச்சாற்றில் எதிர் ஒட்சியேற்றத் தன்மை இருப்பதால் புற்றுநோய் வராமல் தடுக்கும். ஆற்றலும் உண்டு. நாரத்தம் பழத்தின் தோலை சீவி, உள் இருக்கும் சுளைகளை மென்று சாப்பிட்டு வர வாய்த் துர்நாற்றம் நீங்கும். நாரத்தம் பழத்தில் உயிர்ச்சத்து C இனைத்தவிர இரும்புச் சத்து, சோடியம், கல்சியம், பீற்றா கரோட்டீன், மக்னீசியம், அய டீன் மேலும் நார்ச்சத்து நிறைந்து காணப்ப டுவதால் ஊட்டச்சத்து குறை பாடு உடை யவர்களுக்கு நாரத்தம்பழம் மிகச்சிறந்ததாகும்.

எம் முன்னோர்கள் நாரத்தம்பழ மரத்தை கர்ப்ப விருட்ச மரம் என குறிப்பிடுவார்கள். பல்லாண்டு காலம் வளரக் கூடியதாகும்.

இப் பழச்சாற்றை யூஸாக தயாரித்துக் குடித்து வரும் போது மலக்கட்டு ஏற்பட வாய்ப்பில்லை. நாரத்தம்பழத்தில் கொழுப்புச்சத்து இல்லாமையால் இருதயநோய் உள்ளவர்களும் இப்பழத்தை பயன்படுத்தலாம். உடற்சூட்டை தணிக்கக் கூடிய பழமாகும்.

நாரத்தம்பழத்தில் கல்சியம், மக்னீசியம் சத்துக்கள் காணப்படுவதால் என்புகளை பலப் படுத் தக் கூடியதாக இருக்கும்.

ஹெஸ்பெரிடின் எனும் அன்ரி ஒட்ஸிடன் நாரத்தம் பழத்தில் அதிகளவு உண்டு. நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு மூச்சு விடுவதில் சிரமம் இருப்பவர்களுக்கு இயற்கையான முறையில் தீர்க்கக்கூடியது. அதேபோன்று நுரையீரல் உறுப்பையும் தூய்மைப் படுத்தி சீராக செயலாற்றவும் உதவுகிறது. இதைவிட நாரத்தம் பழத்தில் லிமோலின் எனும் அன்ரிஒட்சிடன் எனும் வேதியற் பொரு ளும் இதில் காணப்படு கிறது. இது பற்கள், பல் ஈறுகளில் ஏற்படும் பாதிப்பையும் தீர்க்கக் கூடி யது. இதற்கு புளிப்பாக இருந்தாலும் நாரத்தம் பழத்தை தோல் சீவி சுளை களாக மென்று சாப்பிட்டுவர சிறந்த பலனைக் கொடுக்கும். இப்பழத்தில் கல்சியம், பொஸ்பரஸ் சத்துக்கள் அதிகளவு இருப் பதால் என்புகளின் அடர்த் தியை மேம்படுத்தக் கூடியது. நாரத்தம்பழத்தில் நார்ச்சத்து அதிகம் இருப்ப தால் இரத்தத்தில் கெட்ட கொலஸ்ரோலின் அளவை கட்டுப்படுத்தக் கூடியது. நன் றாக கனிந்த நாரத்தம் பழச்சாற்றை எடுத்து வடிகட்டி அளவான சீனி, நீர் சேர்த்து அதிகா லையில், கலக்கி அருந்தி வர பித்தத்தால் ஏற்படும் உஷ் ணத்தை தணிக்கக் கூடியது.

நாரத்தம்பழரசத்தை சிறிது உப்பு நீர் சேர்த்து அருந்த மது அருந்து வதால் ஏற்படும் வெறியை நீக்கும். நாரத்தங்காயை கற்ப முறையாக ஊறுகாய் செய்து சாப்பிட்டு வந்தாலும் வாந்தி, குமட்டல், பசியின்மை, மந் தம், வயிற்றுப் பொருமல் நீங்கி பசி எடுக்கும். எலு மிச்சம் ஊறுகாயை விட நாரத்தம் ஊறுகாய் மருத் துவப் பண்புகள் நிறைந்தது.

நாரத்தம்பழத்தில் காணப்படும் Flavonoids மற்றும் Limonoids போன்ற வேதியற் பொருட்கள் இரத்தத் தில் கொலஸ்ரோலின் அளவை சீராகப் பேணு வதுடன் உயர்குருதி அமுக் கத்தைச் சீராக பேணக் கூடியதாகவும் இருக்கும்.

வறட்சியான தோலையுடையவர்கள் நாரத்தம் பழச்சாறு ஒழுங்காக அருந்தி வர தோலை ஈரலிப்பாக வைத்திருக்கும். இப்பழத்தில் காணப்படும் உயிர்ச்சத்து C ஆனது Collagen உற்பத்திக்கு உதவுவதால் சருமம் ஆனது நன்நிலையில் பேண உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 605



அன்னையின் கர்ப்பத்தில் அவள் இருந்தபோது, கொடும்பாளூர் சிறிய வேளார், கொடிய போர்களில் ஈடுபட்டிருந்தார். வெற்றிச் செய்தியும், தோல்விச் செய்தியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. இவை அவளுடைய அன்னையின் உள்ளத்தில் களிப்பையும், துயரத்தையும் மாற்றி மாற்றி உண்டாக்கின.

வானதி பிறந்த சில காலத்துக்குப் பிறகு அவளுடைய அன்னை காலமானாள். பிறகு வானதியை அவளுடைய தந்தை கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தார்.

ஆனால் இதுவும் நீடித்திருக்கவில்லை. வீராதி வீரராகிய வானதியின் தந்தை அருமை மகளை முன்னிட்டுக்கூட அரண்மனையிலேயே உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. வீரபாண்டியன் ஓடி ஒளிந்த பிறகு, அவனுக்குத் துணை வந்த ஈழத்துப்படைகளைத் துரத்திக் கொண்டு இலங்கை சென்றார். அங்கே போர்க்களத்தில் உயிர்நீத்து, சரித்திரத்தில் 'ஈழத்துப் பட்ட சிறிய வேளார்' என்ற பட்டப்பெயர் பெற்றார்.

பின்னர், வானதியின் வாழ்க்கை சிலகாலம் ஒரே துயரமாயிருந்தது. தாயை இழந்து, தகப்பனாரால் வளர்க்கப்பட்ட பெண்கள்தான் அந்தச் சோக உணர்ச்சி எத்தகையது என்பதை அறிய முடியும். பெற்றோரில்லாப் பெண் கொடும்பாளூர் அரண்மனையில் சீராட்டி வளர்க்கப்பட்டாலும், அவளுடைய உள்ளத்தில் தந்தை பெற்றிருந்த இடத்தை யாரும் பெற முடியவில்லை. அதற்குப் பலரும் பலவிதமாக ஆறுதல் கூறினார்கள். "வருந்தாதே குழந்தை! உன் தந்தை உன் வயிற்றில் வந்து மீண்டும் வீரமகனாகப் பிறப்பார் உலகம் வியக்கும்படியான அற்புத வீரச்செயல்களைப் புரிவார் என்று ஒருவர் கூறினார்.

இவ்வார்த்தைகள் வானதியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து வேரூன்றின. அருமைத் தந்தையைப் பிரிந்ததினால் ஏற்பட்ட துயரத்தையும், சோர்வையும் கற்பனை மகனைப் பற்றி எண்ணுவதிலே போக்கிக் கொள்ள முயன்றாள். அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தாள்.

தனக்குப் பிறக்கும் குமரன் எப்படி எப்படி இருப்பான். எந்தெந்த மாதிரி நடப்பான், எத்தகைய வீரச்செயல்களைப் புரிவான் என்ற மனோராஜ்யத்தில் நாள் கணக்காக மூழ்கி விடுவாள். கற்பனைக் கண்ணின் மூலமாக, அந்த வீர மகன் தூர தூர தேசங்களுக்குச் சென்று மாபெரும் யுத்தங்களில் வெற்றி பெறுவதைப் பார்த்தாள்.

வேகமாகத் திரும்பி வந்து அவன் அடைந்த வெற்றியின் காணிக்கைகளை எல்லாம் தன்னுடைய காலடியில் சமர்ப்பிப்பதைப் பார்த்தாள். அவன் மணிமுடி தரித்து வீர சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். ராஜாதி ராஜாக்கள் வந்து அவனுக்குக் கப்பம் கட்டி அடிபணிவதைப் பார்த்தாள். அவனுடைய திருமுகத்தைக் கண்டதும் ஜனத் திரள்கள் பூரண சந்திரனைக் கண்ட மாகடலைப் போல பொங்கி எழுந்து, அலை மோதி ஆரவாரிப்பதைப் பார்த்தாள். நூறு நூறு கப்பல்களின் வீரர்களை ஏற்றிக் கொண்டு அவன் கடல்களைக் கடந்து சென்று அப்பாலுள்ள நாடுகளிலே வெற்றிக்கொடி நாட்டுவதைப் பார்த்தாள். "அன்னையே! நான் அடைந்துள்ள இத்தனை பெருமைக்கும் காரணம் நீயே அல்லவோ!" என்று தன்னிடம் அடிக்கடி அவ்வீரமகன் வந்து கூறுவதையும் கேட்டாள்.

அந்த அறியாத பேதைப் பெண் சில சமயம் தன் ஆலிலை வயிற்றைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொள்வாள். தன் கற்பனை மகன் ஒரு வேளை வயிற்றில் வந்து விட்டானோ என்றுதான்.

(தொடரும்)

---

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்

(தொடர்ச்சி...)

விழிப்பாக இருக்க வேண்டும். அதுவும் நண்பர்கள் யாருமில்லாமல் தனியாக வரக்கூடாது என்று அறிவுரை கூறினான். அவனுடைய ஊர் பெயர் என்ன செய்கிறார் என்ற விபரங்களைக் கேட்டான். அச்சிறுவன் பக்கத்து ஊர்தான் என்றும் அவன் ஒரு பள்ளி ஆசிரியரின் மகன் என்றும் ஏழாம் வகுப்பில் படிக்கிறான் என்றும் தெரிந்து கொண்டான்.

அவன் பெயர் கிருஷ்ணன் என்றும் தெரிந்து கொண்டான். கிருஷ்ணன் இந்த நிகழ்ச்சியை மறக்க நியாயப்படி மறுபிறவி தந்தவர் இராமன்தான் என்று பூரிப்பில் திளைத்தார். மறுபிறவியெடுத்து வந்த செய்தியை தன் பெற்றோருக்கும் ஊராருக்கும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.



காலங்கள் உருண்டோடின கிருஷ்ணன் நன்றாகப் படித்து மருத்துவராகப் பணியில் சேர்ந்தான். அமெரிக்காவில் உள்ள நண்பனின் உதவியால் அமெரிக்கா சென்று பத்தாண்டுகள் பணிபுரிந்தான். அங்கு சம்பாதித்த பணத்தையெல்லாம் கொண்டு வந்து ஒரு மருத்துவ மனை நிறுவினான்.

மருத்துவமனைக்கு யார் பெயரைச் சூட்டுவது என்று பேச்சு வந்தது. முதலில் அவனுடைய தாயின் பெயர் தான் நினைவுக்கு வந்தது. அப்பா தன்னைச் சீராட்டி பாராட்டி வளர்த்து ஆளாக்கிய அந்த நாட்களும் நினைவில் நிழலாடின. என்றாலும் தான் இப் போது உயிர் வாழ்வதற்கு இராமன் தான் காரணம் என்பதை அவன் எண்ணிப்பார்த்தான். அப்பாவிடம் தான் கட்டிய மருத்துவமனைக்கு இராமன் மருத்துவமனை என்று பெயர் சூட்டப் போவதாகச் சொன்னான். மகனின் நன்றியுணர்வை எண்ணிப் பூரித்து போனார் கிருஷ்ணனின் தந்தை அம்பலவாணன்.

மருத்துவமனை திறப்பு விழாவிற்கு நண் பன் இராமனை அழைக்கப் பெருமுகை கிராமத்திற்கு கிருஷ்ணன் இராமன் வீடு தேடி சென்றான். இராமன் அங்கே இல்லை மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என வாழ்ந்த இராமன் ஒரு மாணவர் விடுதியை நடத்தி வருவதாகக் கேள்விப்பட்டு மாண வர் விடுதி இருக்கும் இராணிப் பேட்டைக்கு வந்தான்.

அமெரிக்காவிலிருந்து வந்துள்ள மருத்துவரை இராமன் அகம் மலர வரவேற்றார். அங்கிருந்த மாணவர்களையெல்லாம் அழைத்து மருத்துவருக்கு அறிமுகம் செய்தார்.

இராமனோ நான் செய்த சிறிய உதவிக்கு கைம்மாறாகப் பெரிய பெருமை வருவது குறித்து மகிழ்ந்தார். என்றாலும் என்னுடைய நெஞ்சில் பிறருக்கு உதவும் எண்ணத்தை ஏற்படுத்தியவர் இந்த மண்ணில் பிறந்த மக்களின் ஆன்மிக வாழ்வில் இரண்டறக் கலந்து விட்ட குன்றக்குடி அடிகளார்தான். எனவே குன்றக்குடி அடிகளார் மருத்துவமனை என்று பெயர் சூட்டுங்கள் என்றான் இராமன். அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இராமன் நேரில் சென்று அடிகளாரின் பெயரில் அமைந்த மருத்துவமனையை திறந்து வைத்தான். நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் என்னும் நீதி இவரின் வாழ்விலும் நின்று நிலைத்தது என்பதை இக்கதையில் தெரிந்து கொள்ளலாம்.

(முற்றும்.)

ஜெ.நிதுஷனா,
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் ஜனாதிபதி அநுரவைச் சந்திக்க வேண்டும்

இருளைக் குறை சொல்லாதீர்கள். ஒளியை ஏற்றுங்கள் என்கிறது ஆங்கிலப் பழமொழி.

ஆம், இருளைக் குறை கூறுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

எனவே குறை கூறுவதை விட்டு மாற்று வழியைத் தேடுவதுதான் புத்திசாலித்தன மான செயல்.

அந்தவகையில், தமிழ் அரசியல் தரப்புகள் தமிழ் மக்களின் விவகாரங்களைக் கவனிக்கவில்லை எனக் குறை கூறுவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

மாறாக, அவ்வாறு கூறுவதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும் நிறைவேறப் போவதில்லை.

ஆகையால் தமிழ் அரசியல் தரப்புகள் எதையும் செய்யவில்லை. அவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறுகின்ற அதேநேரம், எமது தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இந்த நாட்டின் ஆட்சித் தலைமையிடம் முன்வைக்கின்ற நடவடிக்கைகளை நாம் செய்தாக வேண்டும்.

இதைச் செய்யாமல், விட்ட தவறை மட்டும் இரை மீட்பதால் ஆவதொன்றுமில்லை.

இதை நாம் கூறுவதற்கான மூலகாரணம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்றுள்ளார்.

மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற சிங்கள புத்திஜீவிகளின் சிந்தனை தென்பகுதி முழுமையிலும் வேகமெடுத்தது.

அதற்குச் சிங்கள புலம்பெயர் அமைப்புக்களும் உறுதுணையாக இருந்தன.

அதன் விளைவாக அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதாவது அரச உத்தியோகத்தர்களுக்கு 24 சதவீதம் தொடக்கம் 50 சதவீதமான சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

கூடவே ரணில் விக்கிரமசிங்க அறிவித்த அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள உயர்வை தான், ஜனாதிபதியாக வந்தால் வழங்குவேன் என சஜித் பிரேமதாஸவும் கூறியிருந்தார்.

ஆனால் சம்பள உயர்வு பற்றி அநுர குமார திஸாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதையும் பிரஸ்தாபிக்கவில்லை.

நிலைமை இவ்வாறாக இருந்தபோதிலும் குருநாகல் மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் மட்டும் வாக்களிக்கின்ற தபால் மூல வாக்களிப்பில், அநுர குமார திஸாநாயக்கவுக்கு 47 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன.

அதேநேரம் ரணில், சஜித் ஆகியோர் அந்த மாவட்டத்தில் தலா ஆறாயிரம் வாக்குகளை மட்டுமே பெற்றனர்.

ஆக, சம்பள உயர்வு என்ற சலுகைகளுக்கு அடிமையாகாமல் இந்த நாட்டில் ஊழல் அற்ற ஆட்சி மலர வேண்டும் என்ற ஒரே நோக்கில் சிங்கள மக்கள் செயற்பட்டுள்ளனர்.

எனவே அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாக இருக்கும்போது அவரை எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் நேரில் சென்று சந்தித்து எமது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எடுத்துரைக்க வேண்டும்.

இதன்மூலம் எமக்கான தீர்வை தமிழ் அரசியல் தரப்புகள் கவனிக்கும் என்ற நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்.

இதுவே தமிழ் மக்களுக்கான உடனடி மாற்றமாக இருக்க முடியும்.

# ஜனாதிபதியாக 26 மாதம் பயணித்தது 24 நாடுகள்

## பொறுப்பற்று நடந்தாரா ரணில்

கடும் பொருளாதார வீழ்ச்சியால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்த போது நாட்டை பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க தனது ஜனாதிபதி பதவிக்காலமான 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையிலான 26 மாத காலப்பகுதியில் 24 நாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அவர் பதவியேற்ற 2022ஆம் ஆண்டில் 4 நாடுகளுக்கு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ள நிலையில், 2023 ஆம் ஆண்டில் 16 நாடுகளுக்கும் 2024ஆம் ஆண்டில் 4 நாடுகளுக்கும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022 வருடாந்த செயல்திறன் அறிக்கைக்கு ஏற்ப குறித்த ஆண்டுக்காக ஜனாதிபதி செயலகத்தால் அதி உயர் பிரமுகர்களுக்கான பயணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 62,178,000 ரூபாய் எனும் நிலையில் அதில் 59,020,000 ரூபாய் செலவளிக்கப்பட்டுள்ளது. அது ஒதுக்கப்பட்ட தொகையில் 95 வீதம் ஆகும்.

வெளிவிவகார அமைச்சின் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023 வருடாந்த செயல்திறன் அறிக்கைக்கு ஏற்ப அவ்வாண்டில் அதி உயர் பிரமுகர்களுக்காக பயணங்களுக்காக ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 384,853,000 ரூபாய் என்பதுடன் அதில் 373,809,000 ரூபாய் செலவளிக்கப்பட்டுள்ளது. அது ஒதுக்கப்பட்ட தொகையில் 97 வீதம் ஆகும்.

2024ஆம் ஆண்டுக்காக ஜனாதிபதி செயலகம், அதி உயர் பிரமுகர்களின் பயணங்களுக்காக எவ்வளவு தொகையை செலவளித்துள்ளது என்பது தொடர்பிலான உறுதியான அறிக்கை காணப்படவில்லை.

எனினும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான விமானப் பயணச்சீட்டுக்கு செலவளித்த தொகை தொடர்பிலான அறிக்கை ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

குறித்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024ஆம் ஆண்டில் பயணித்த சுவிட்சர்லாந்து, உகண்டா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் விபரங்கள் மாத்திரம் உள்ளடங்குவதுடன் 2024 ஆம் ஆண்டு மே மாதம் பயணித்த இந்தோனேசியா பயணம் குறித்து எதுவித தகவல்களும் உள்ளடங்கவில்லை.

அந்த அறிக்கையின்படி, சுவிட்சர்லாந்து மற்றும் உகண்டாவுக்கு மேற்கொண்ட பயணங்களுக்கான விமான பயணச்சீட்டுகளுக்காக 16,825,000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆஸ்திரேலிய பயணத்துக்கு கட்டணம் செலுத்தப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த தொகையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் பயணித்த ஏனையவர்களுக்கான தொகையும் அதில் உள்ளடங்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-7)

### வலி.தெற்கு பிரதேச சபை

## அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை 2025 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித்திட்டம் தொடர்பான முன்மொழிவுகளைத் தெரிவு செய்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பில் பொதுமக்களின் பூரண பங்கேற்பை எதிர்பார்த்துள்ளது.

இதற்கான கலந்துரையாடல்களின் ஒரு பகுதியாக வட்டாரம்-11 இற்கு உட்பட்ட ஜே-185, ஜே-186 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பகுதிகளில் அவசியம் செய்ய வேண்டியதான அபிவிருத்தித் திட்டங்களை இனம் கண்டு முன்னுரிமைப் படுத்தல் தொடர்பான கூட்டம் இன்று திங்கட்கிழமை (14) பிற்பகல்-02.30 மணியளவில் தோம்பை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள உடுவில் கிழக்கு இந்து இளைஞர் மன்ற முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் மேற்படி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பொதுமக்களையும் தவறாது கலந்து கொண்டு தேவையான தகவல்களை வழங்கி அபிவிருத்தியில் பங்கேற்குமாறு வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-7)

# ஓட்டோ கட்டணத்தில் நாளை முதல் மாற்றம்

(கிளிநொச்சி)

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் முச்சக்கர வண்டிகளின் கட்டணங்களை குறைக்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட முச்சக்கர வண்டி, மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டி மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினரால் நேற்றைய தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்ப கட்டணமாக 200 ரூபாவாகவும் தொடர்ந்து வரும் கட்டணமாக 100 ரூபாவாகவும் பெறப்பட்ட நிலையில் புதிய அரசாங்கத்தின் பெற்றோல் விலை குறைப்பு காரணமாக ஆரம்ப கட்டணமாக 150 ரூபாவும் தொடர்ந்து வரும் கட்டணமாக 100 ரூபாவும் காத்திருப்புக்கட்டணமாக நிமிடத்திற்கு ஐந்து ரூபாவாகவும் அறவிடுவதாக தீர்மானித்துள்ளோம்.

கொழும்பில் ஆரம்ப கட்டணம் நூறு ரூபாவாக இருந்தாலும், கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிகள் சீர் இன்மையால் இந்தக் கட்டணத்தை அறவிடுகின்றோம்.

எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டமும் அபிவிருத்தி அடையும் நிலையில் கொழும்புக்கு சீரான கட்டணத்தை கொண்டுவர முடியும் எனத் தெரிவித்தனர். (ந-7,316)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(மகுலுகஸ்வெவ)

மகுலுகஸ்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவஹூவ பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை சட்டவிரோதமாக வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மகுலுகஸ்வெவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 33 வயதான தேவஹூவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மகுலுகஸ்வெவ பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ந-7)

# ஐஸ் போதைவஸ்துடன் பொலிஸாரால் ஒருவர் கைது

மிஹிஜய செவன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் காரில் பயணித்த சந்தேக நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹேனமுல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ்போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I




கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.


04

இந்தியர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் குடியுரிமை பெற தம்மைப் பதிவுசெய்து கொள்ளாத காரணத்தினால் இலங்கையின் சனத்தொகைக்கும் இலங்கையின் குடியுரிமை உள்ளவர்களின் சனத் தொகைக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. 1946 ஆம் ஆண் டின் சனத்தொகை கணிப்பீட்டின்படி இலங்கையின் சனத்தொகை 6,636,617 ஆகவும் குடியுரிமை உள்ளவர்களின் சனத்தொகை 6,484,409 ஆகவும் காணப் பட்டது.

அன்றைய காலத்தில் இலங்கை யிலிருந்த தேர்தல் முறையானது ஒப்பிடுகையில் பெரும்பான்மை அடைந்தவர் (First Past the Post –FPP) வெற்றி பெறும் முறை யாகும். அதாவது ஒரு தேர்தல் தொகுதியில் கூடுதலான வாக்குகள் பெற்றவர் வெற்றிபெற்றவராவர்.

ஒரு குறிப்பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன் னொரு சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் அப் பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச் சிறுபான்மை யினருக்கும் பிரதிநிதித்துவம் வரக் கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும் என்ற கருத் தின் அடிப்படையில் இக் குழுவி னால் 5 பல் அங்கத்தவர்கள் தேர் தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.

அவ்வாறு உருவாக்கப்பட்ட பல் அங்கத்தவர்கள் தொகுதிகள் பின்வருமாறு. மத்திய கொழும்பு - 3 அங்கத்தவர்கள் தொகுதி, அம் பலாங்கொடை-பலப்பிட்டிய, பலாங் கொடை, கடுகண்ணாவை மற்றும் பதுளை இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள். மற்றவை எல்லாம் ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் ஆகும். எனவே மக்களால் தேர்ந்தெடுக் கப்படும் 95 பிரதிநிதிகளும் 89 தேர்தல் தொகுதிகள் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

மேற்கூறிய அடிப்படையில் மாகாண மட்டத்தில் தேர்தல் தொகு திகள் பின்வருமாறு எல்லை நிர்ண யம் செய்யப்பட்டன . மேல் மாகா ணம் -18, மத்திய மாகாணம் -14, தென் மாகாணம் -11, வட மாகா ணம் -9, கீழ் மாகாணம் -7, வட மேல் மாகாணம் -10, வட மத்திய மாகாணம் -5, ஊவா மாகாணம் -6 மற்றும் சப்பிரகமுவ மாகாணம் -9. மொத்தம் 89 தொகுதிகளாகும்.

வட மாகாணத் தேர்தல் தொகு திகள் ஊர்காவற்றுறை, வட்டுக் கோட்டை, காங்கேசன்துறை, யாழ்ப் பாணம், கோப்பாய், பருத்தித்துறை. சாவகச்சேரி, மன்னார், வவுனியா திருகோணமலை மாவட்டத்தேர் தல் தொகுதிகள் திருகோணமலை, மூதூர். மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் தொகுதிகள் கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில். இவை எல்லாம் ஒற்றை அங்கத்தவர் தொகுதிகளாகும்.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் சொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

- 1931 ஆம் ஆண்டின் சனத் தொகை அடிப்படையில் 70 தேர்தல் தொகுதிகளும் மாகாண மட்டத்தில் பிரிக்கப்பட்டிருந்தாலும் மாகா ணத்திற்குள் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்யப்படும் போது 1946 ஆம் ஆண்டின் சனத் தொகை கணிப்பீடே பாவிக்கப்பட்டது.

- 1946 ஆம் ஆண்டின் சனத் தொகை கணிப்பீட்டின்படி இன ரீதி யில் பார்த்தால் 95 தேர்தல் தொகு திகளும் சிங்களவர்- 66, இலங் கைத் தமிழர்- 12, இந்தியர் (முஸ் லீம் தவிர)- 10, முஸ்லீம்-6, ஏனைய இனத்தவர்-1, என பிரிக்கப்படல் வேண்டும். ஆனால் மாகாண மட்டத்தில் ஒதுக்கப்படவேண்டிய தேர்தல் தொகுதிகள் 1946ஆம் ஆண்டின் சனத்தொகை ரீதியில் பார்க்கும் போது 95 தேர்தல் தொகுதிகளும் அட்டவணை-1இல் காட்டியதுபோன்று பிரிக்கப்படல் வேண்டும்.

மாகாண மட்டத்தில் ஒதுக்கப்பட்ட அங்கத்தவர்கள் அட்டவணை-1

| மாகாணம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லீம் தவிர) | முஸ்லீம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மேல் | 16 | 1 | 1 | 1 | 1 | 20 |
| மத்திய | 8 | 1 | 4 | 1 | 1 | 15 |
| தென் | 11 | - | - | - | 1 | 12 |
| வட | - | 8 | - | - | 1 | 9 |
| கீழ் | - | · 3 | - | 3 | 1 | 7 |
| வடமேல் | 9 | - | - | 1 | - | 10 |
| வட மத்திய | 4 | - | - | - | 1 | 5 |
| ஊவா | 5 | - | 2 | - | - | 7 |
| சப்பிரகமுவ | 8 | - | 1 | - | 1 | 10 |
| மொத்தம் | 61 | 13 | 8 | 6 | 7 | 95 |

எல்லை நிர்ணய ஆணைக்குழு குறிப்பிட்டதுபோல் ஒவ்வொரு சமூ கத்திற்கும் கிடைக்கவேண்டிய அங் கத்தவர்கள் எண்ணிக்கையையும் தேர்தலில் கிடைக்கப்பெற்ற அங்கத் தவர்கள் எண்ணிக்கையையும் ஒப்பிடும்போது அட்டவணை- 2இல் காட்டப்பட்டது போல் அமைந்தி ருந்தது.

அட்டவணை-2

| எல்.எம். டி. த. சில்வா எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் படி கிடைக்கவேண்டிய அங்கத்தவர்கள் எண்ணிக்கை | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியர் (முஸ்லீம் தவிர) | முஸ்லீம் | தீர்மானிக்க முடியாத மற்றும் ஏனைய இனத்தவர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| நாட்டின் (1946ம் ஆண்டு) சனத்தொகை அடிப்படையில் | 66 | 12 | 10 | 6 | 1 | 95 |
| மாகாணமட்டத்தில் | 61 | 13 | 8 | 6 | 7 | 95 |
| தேர்தல்களில் கிடைக்கப் பெற்ற அங்கத்தவர்கள் | | | | | | |
| 1947ம் ஆண்டுத்தேர்தல் முடிவுகள் | 68 | 13 | 7 | 6 | 1 | 95 |
| 1952ம் ஆணடுத்தேர்தல் முடிவுகள் | 75 | 13 | 0 | 7 | 0 | 95 |
| 1956ம் ஆணடுத்தேர்தல் முடிவுகள் | 75 | 12 | 0 | 7 | 1 | 95 |

இலங்கையில் அரசியற் கட்சிக ளின் தோற்றம்- 1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பினூடாக சர்வஜன வாக்குரிமை அறி முகப்படுத்தப்பட்டாலும் பிரித்தானிய மாதிரியிலான பாராளுமன்ற அரசாங்க முறை முழுமையாக அறிமுகப்படுத்தப்படவில்லை. பிரித் தானிய மாதிரியிலான பாராளு மன்ற அரசாங்க முறை என்பது கட்சி முறை அரசாங்கத்திற்குரிய அர சாங்க முறை ஆகும்.

அதாவது பொதுத்தேர்தலில் எக் கட்சிபெரும்பான்மை ஆசனங் களைப் பெற்றுக்கொள்கின்றதோ அந்தக்கட்சியிடம் அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை ஒப்படைக் கும் முறை இதுவாகும். 1935 ஆம் ஆண்டுவரை இலங்கையில் அரசி யற் கட்சிகளென்பது இருக்கவில்லை. 1928இல் ஏ.ஈ. குணசிங்கவினால் தொழிற்கட்சி என்ற பெயரில் ஒரு கட்சி உருவாக்கப்பட்டபோதும் அது ஓர் அரசியற் கட்சிக்குரிய பண்பு களைக் கொண்டதாக அமைய வில்லை.

இலங்கையின் முதலாவது அரசி யற் கட்சியான லங்கா சமசமா ஜக்கட்சி (LSSP) 1935இல் தோற்றம் பெற்றது. இதனைத் தொடர்ந்தே டொனமூர் அரசியல் யாப்புக் காலத் தில் (1931-1947) இலங்கை இந்திய காங்கிரஸ் (1939), இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (1943), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி (1944), பொல செவிக் லெனினிஸ்ட் கட்சி (1945), ஐக்கிய தேசிய கட்சி (1946), சுயராட்சியக் கட்சி (1947) என்பன தோற்றம் பெற்றன.

பாராளுமன்ற அரசாங்கம் நடைமுறையில் இல்லாதபோதும் சர்வஜன வாக்குரிமையின் அறி முகம் கட்சிகளின் தோற்றத்தினை ஊக்குவித்திருந்தது.

இலங்கையின் பிரதான இயக்க மாக விளங்கிய இலங்கை தேசிய காங்கிரஸ், எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவினால் உரு வாக்கப்பட்ட சிங்கள மகாசபை, முஸ்லீம் மக்களின் நலன்களைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட முஸ்லீம் லீக் ஆகிய மூன்று அமைப் புக்களும் மற்றும் சில தமிழ்க் குழுக்கள் ஒன்றிணைந்தே ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கின.

## சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் முதலாவது பாராளுமன்றத்தேர்தல் -1947

முதலாம் பாராளுமன்றத் தேர் தல் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23, 25, 26, 27, 28, 30 மற்றும் செப்டெம்பர் மாதம் 1, 4, 6, 8, 9, 10, 11, 13, 15, 16, 17, 18, 20ஆம் திகதிகளில் (மொத்தம் 19 நாட்கள்) நடைபெற்றது.

இத்தேர்தலில் திரு டீ.எஸ்.சேன நாயக்காவின்தலைமையில் அமைத் துக்கொண்ட ஐக்கிய தேசிய கட்சி யும், கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவின் லங்கா சமசமாஜ கட்சியும், கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவினால் ஆரம்பிக் கப்பட்ட போல்சேவிக் லெனினிஸ்ட் கட்சியும், டாக்டர். எஸ்.ஏ. விக்கி ரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியும், ஏ.ஈ. குண சிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்கட்சியும், ஜீ.ஜீ. பொன்னம் பலம் அவர்களினால் ஆரம்பிக் கப்பட்ட அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும், இலங்கை இந்தியா காங்கிரஸ் கட்சியும், ஜேம்ஸ். ஜீ. பெர்ணான்டோவினால் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சுயராட்சியக் கட்சியும் மற்றும் சில சுயேட்சை அபேட்சகர்களும் தேர்த லில் போட்டியிட்டனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் டெங்கு...

வித்துள்ளார்.

வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழில் பல் பகுதிகளிலும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பெரிய கோயிலில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரண, யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் வைத்தியர்கள், சுகாதார அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ந-7)

## நீர்க்கட்டணம்...

அவர்களிடமிருந்து நீர்க்கட்டணத்திற்காக 9 மில்லியன் ரூபாய் அறவிடப்பட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது விதிமுறைகளின் கீழ் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

எந்தவொரு சலுகைகளும் இன்றி அரச சுற்றறிக்கையின்படி அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

## நாட்டில்...

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை களனி கங்கை, களு கங்கை, ஜின் கங்கை மற்றும் அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் தற்போது படிப்படியாகக் குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 22 கடற்படைக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ந-7)

## வடக்கின்...

எமது அரசியல் பலம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. ஜனாதிபதி தலைமையிலான மூவரை உள்ளடக்கிய அமைச்சரவையே காணப்படுகின்றது.

எந்தவிதத்திலும் இது போதுமான தல்ல. தற்போதைய ஜனாதிபதிக்கும் புதிய அமைச்சரவைக்கும் பாரிய பொறுப்புக் காணப்படுகின்றது. புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

அந்த இலக்கினை அடையும் வரை நாம் பல விடயங்களைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஒரு சில தீர்மானங்களை எடுக்க நேரிடும். இது எமக்குச் சவாலான விடயமாகும். நவம்பர் 14 பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது பலமிக்க அதிகாரத்தினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

பாராளுமன்றில் பலமிக்க அதிகாரத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்ற போதிலும் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதனால் மாத்திரம் பலமிக்க அதிகாரத்தினைப் பெற முடியாது.

தகுதிவாய்ந்தவர்கள் பாராளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். ஜனநாயக உரிமைகளுக்காகப் பாராளுமன்றுக்குள் எதிர்க்கட்சி ஒன்றின் தேவை காணப்படுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளன. கடந்த காலங்களில் வடக்கு அரசியல்வாதிகள் எம்முடன் கலந்துரையாடியிருந்தனர்.

அதாவது வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படத் தயார் இல்லையெனில், வடக்கு மக்கள் ஜனாதிபதியுடன் இணைவார்கள் என அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர். இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ந-7)

## அரசியலிலிருந்து...

தனது எதிர்கால அரசியல் பயணம் குறித்து ஆதரவாளர்களுக்கு அறிவிப்பதற்காக கண்டியில் நேற்று அவர் ஏற்பாடு செய்த கூட்டத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நீதிமன்றத்தின் மூலம் நீதி நிலைநாட்டப்படும் என்ற உறுதியான நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும், நிரபராதியாக மீண்டும் அரசியலுக்கு வருவேன் என நம்புவதாகவும் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ந-7)

## கட்சியிலிருந்து...

கில்லை.

எனது கட்சி தமிழரசுக் கட்சியே. எனவே நான் கடைசிவரை போராடுவேன் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியன் யாழ்.தேர்தல் மாவட்ட பாராளுமன்ற வேட்பாளர்களது அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த சிறீதரன் தமிழரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவராக நான் இருக்கும் போதும் இன்று என்னால் தலைவராகச் செயற்பட முடியாத நிலை உள்ளது.

ஆயினும் அந்தச் சவால்களை யும் எதிர்கொண்டு நான் கட்சியிலிருந்து செயற்படுகிறேன்.

அண்மைக் காலங்களில் என் மீதான சேறுபூசல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிறீதரன் பாபர் மிற்றுக்கு சிபார்சுக் கடிதம் கொடுத்தார் எனப் பிரசாரம் செய்யப்படுகிறது.

நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நான் யாருக்கேனும் பார் பெர்மிற்றுக்காகச் சிபார்சுக் கடிதம் கொடுத்திருந்தால் அதைக் காட்டுங்கள். நிரூபியுங்கள்.

என் மீது அவதூறான பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராகப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளேன்.

விஷமப் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக நிச்சயம் சட்டநடவடிக்கை எடுப்பேன் என்றார். (ந-7)

## வெடிபொருள்...

தமக்குச் சொந்தமான வயல் காணியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபொழுது மண்ணுள் புதையுண்ட நிலையில் இருந்த வெடிபொருள் வெடித்துள்ளது.

இதில் பளை அரசகேணிப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரொருவரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,316)


மஹஜன சம்பத
திகதி 2024.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 5624
C 4 4 5 0 7 0
அத சம்பத
C 5 0 7 0
சீட்டிழுப்பு இலக்கம் 199

தன நிதானய
திகதி - 2024.10.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1654
K 03 09 23 30 K
Double Chance 52998

மெகா பவர்
திகதி 13/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1972
A 22 16 25 38 53
99367

லக்கி 7 VIP
திகதி 2024.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 0450
X 8 3 3 1 2 5 X

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3866
சீட்டிழுப்பு திகதி 13.10.2024
P 01 11 31 46
P 78349

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 933
மிதுனம் 10 20 36 53 மிதுனம்
48971 21

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சவிய
13.10.2024 வெற்றி வாரம் 332
J 5 9 9 5 3 4
42832
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,701,212.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2598 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 13.10.2024 தினம் ஞாயிற
11 23 40 63 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,814,216.00
DLB

சனிதா
திகதி 2024.10.13 வெற்றி வாரம் 4759
49 50 67 70 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,921,821.60
95692
DLB

சசிரி
வெற்றி வாரம் 540
சீட்டிழுப்பு திகதி 2024.10.13
கபிலம்
13 33 50
05
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,071,160/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4310 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.10.13 தினம் ஞாயிற்றுக்கிழமை
12 28 39 41 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,313,098.00
207539
DLB

கப்ருக
V 24 10 25 42 56
1774
மஞ்சள்
13.10.2024
ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 550,203,745.00
DLB

அட கோட்டிபதி
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2424
சீ. டிழுப்பு திகதி : 2024.10.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,123,645.60
23 41 66 72 R
824719
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

(2295)

**070 168 3354, 070 668 3354**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (2296)

**076 825 7716 (ஆகாஸ்)**

## பெண் பராமரிப்பாளர் தேவை

75 வயதுடைய பார்வையிழந்த முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கு வீட்டில் தங்கி நிற்கக்கூடிய பெண் பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் 60 ஆயிரம் (மாதம்)
(425)

**076 124 3637**
**074 367 0198**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க 1989 ஆம் ஆண்டு பிறந்த அரச பணி புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு : **077 967 2613**

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க 1986 ஆம் ஆண்டு பிறந்த தனியார் துறையில் பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு : **077 967 2613** (2293)

## திங்கள் முதல் புதன் வரை — X MARD — 14,15,16 10.2024

EVERYWHERE FOR YOU

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 (300) Fems 8 Pcs | Rs. 59.00 (80) Anchor Yoghurt | Rs. 1799.00 (2000) Protinex |
| Rs. 339.00 (425) Vim Liquid | Rs. 2589.00 (3000) Vitagen Vannila | Rs. 299.00 (380) Sunlight Powder Rose | Rs. 1129.00 (1190) Anchor Plus |
| Rs. 149.00 (175) Santoor Soap | Rs. 439.00 (480) Chick Shampoo | Rs. 2999.00 (3335) Diabeta Plus | Rs. 379.00 (500) Ocean Star Mackerel |
| Rs. 919.00 (1150) 5kg Prima Wheat Flour | Rs. 3499.00 (3980) Sustagen 400g | Rs. 149.00 (200) Noodles | Rs. 349.00 (400) Pepsi 1.5L |

(C-1395)

Call For Information 074 1011 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2026ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் **0768226244**
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி **05-11-2024**
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351 |
| 0764550673 | 0768226240 | 0777068777 | 0764550675 | 0768226242 | 0768226238 |
| 0764550670 | 0777718322 | 0777726322 | 0764550074 | 0764550671 | 0777720322 |
| 0776699892 | V2 Travels | | 0743900353 | 0768226230 | 0776697960 |

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுகள் 36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (427)

**APEX TRAVELS**

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## காணி விற்பனைக்கு

**தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அருகாமையில் (800m - தெல்லிப்பளை - வல்லை வீதி) 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- பிரித்தும் கொடுக்கப்படும்.
- வீடு மற்றும், Hostel (வைத்தியர்கள், தாதியர்களுக்கான) கட்ட உகந்தது.

(C-1393)

**077 854 6369, 077 058 3507**

## Techna
Technical Institute

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

A/L தொழினுட்பப்பிரிவு

## விசேட செயலமர்வு - 2024

| | |
|---|---|
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | 19, 20 OCT 8.00am - 3.00pm |
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் பொறியியல் தொழினுட்பவியல் | 26, 27 OCT 8.00am - 3.00pm |
| ICT, விவசாய விஞ்ஞானம் புவியியல், கணிதம் | 01, 02, 03 OCT 8.00am - 3.00pm |

அனுமதிகளுக்கு 15/10/2024 முன் முற்பதிவுகளை நேரடியாக அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.
(2294)

## CANADA VISA

**வெற்றிகரமான 13 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கும் winstar visa Consultants இன் அதிரடி சலுகை**

## 90% கட்டணக்கழிவு

- கனடா விசாக்கள் 13 பேருக்கு மட்டும். மொத்தக் கட்டணத்தில் 90% கட்டணக்கழிவு.
- 13 நாட்களுக்குள் விண்ணப்பித்துத் தரப்படும்.
- Sponsor அழைப்புக் கடிதம் எம்மால் ஒழுங்கு செய்யப்படும்.
- முதல் முறையாக விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டும்.
- சட்டத்தரணிகள் மூலம் ஒப்பந்தம்.
- குடும்பமாகவும் செல்லலாம்.

(428)

**பலரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 13 பேருக்கு மட்டும் இச் சலுகை**



CANADA

இன்றே இவ்வரிய சந்தர்ப்பத்தினை தவற விடாமல், முற்பதிவு செய்து நேரில் வரவும். 90%

**Winstar Consultants Pvt Ltd**
**45, Vembadi Street, Jaffna.**
**071 071 6979**

"குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"

## மாபெரும் இலவச மருத்துவ முகாம்

கருவளச்சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்தியநிபுணர் Dr.H.ரத்னாயக்கா அவர்களைச் சந்தித்து ஆலோசனை பெறும் அரியவாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.

காலம் - 15.10.2024 செவ்வாய்க்கிழமை
நேரம் – காலை 8.00 மணி – பிற்பகல் 2.00 மணி
இடம் – இணுவில் – மக்லோட் வைத்தியசாலை

ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம்.
தொடர்புகளுக்கு
0771215005 , 0760114702, 0212241569
மக்லோட் வைத்தியசாலை, கே.கே.எஸ் வீதி, இணுவில், யாழ்ப்பாணம்

கருவளச்சிகிச்சைக்கு வருவதற்கு யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து கே.கே.எஸ் வீதி ஊடாக இணுவிலிற்கு 16 நிமிடங்கள் மட்டுமே. (C-139[illegible])


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] இல.191 [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.